IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.234/2021
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி ராஜேஸ்வரி க.பெ.முத்தையா

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 05.12.2024 in accordance with the provisions of Act XX141.**

1மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் படித்துள்ளேனா என்றால் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை பற்றி தெரிந்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கின் 3ம்பிரதிவாதி எனது கணவர் என்றால் சரிதான். நானும், எனது அக்காவும் 3ம்பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

2. எனது அக்காவிற்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 30 வருடத்திற்கு மேலாக இருக்கும். எனது அக்கா உயிருடன் இருக்கும்போதே எனது கணவர் என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது அக்காவிற்கு கண் தெரியாததால் என்னை திருமணம் செய்து கொண்டார். நிரூபணவாக்குமூலத்தில் தாவாச் சொத்து பாகப்பிரிவினை அடிப்படையில் உடையாத்தேவரிடமிருந்து தவசித்தேவருக்கு கிடைத்தது என்றால் சரிதான்.

3. மேற்படி பாகப்பிரிவினை எந்த வருடம் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உடையாத்தேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண்பிள்ளைகள் மற்றும் 4பெண்பிள்ளைகள் ஆவார்கள். பாகப்பிரிவினையில் தவசித்தேவருக்கு எத்தனை இலக்கச் சொத்து ஒதுக்கினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. எனது தந்தை இறப்பதற்கு முன்பே எனது அக்கா இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4ம்பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது மதுரை செல்லூரில் வசித்து வருகிறார். நானும், எனது கணவரும் சிறிது காலம் 6 ஆண்டுகள் திருப்பூரில் முருகன்பாளை பகுதியில் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

5. எனது தந்தைக்கும், எனது தாத்தாவிற்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனது கணவரின் சொந்த ஊர் எது என்றால் கரிசல்பட்டி ஆகும். ஆனால் நாங்கள் அங்கு இருந்ததில்லை. எனது கணவருக்கு பூர்வீகச் சொத்து உள்ளதா என்றால் இல்லை.

6. தாவாச் சொத்துக்களை நானும், பிரதிவாதியும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களில் நானும், எனது சகோதரியும் சேர்ந்து சுமார் 1 ஏக்கர் 20 செண்டு நிலங்களை உழுது விவசாயம் செய்து வந்தோம். கடந்த 4 ஆண்டுகளாக வாதிகளுடன் தகராறு ஏற்பட்ட காரணத்தினால் விவசாயம் செய்யவில்லை.

7. தாவாச் சொத்து சம்மந்தமாக பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தந்தை 30 வருடங்களுக்கு முன்னர் எனக்கும், என் சகோதரி பெயருக்கும் வெண்ணிலபத்திரம் எழுதிக்கொடுத்தார். எத்தனை செண்டு எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு 30 செண்டும், எனது அக்காவிற்கு 30செண்டும் எழுதிக்கொடுத்தார். மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் உழவு செய்து வந்தோம் என்றால் சரிதான்.

8. வெண்ணிலபத்திரத்தில் எனது அண்ணன், தம்பி கையொப்பம் செய்தார்களா என்றால் செய்யவில்லை. அவர்கள் இளையவர்களாக இருந்ததால் அவர்கள் கையொப்பம் செய்யவில்லை. 15 இலக்கச்சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வெண்ணிலபத்திரத்தில் சக்கிலி வயல், காரைக்காட்டு கிணறு, மணவயல், பொட்டவயல் ஆகியவற்றை நாங்கள் விவசாயம் செய்து வந்தோம்.

9. மேற்படி வயல்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கிஸ்தி இரசீது என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்படி 4சொத்துக்களை தான் 1, 2 பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றால் சரிதான். இதர சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள்.

10. 30 செண்டு நிலத்தினை வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து எனது கணவருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் இல்லை. ரூ.11ஆயிரம் எனது தகப்பனாருக்கு கடன் கொடுத்திருந்தேன். எப்போது கொடுத்தேன் என்றால் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக கொடுத்தேன். மேற்படி கடன் தொகையை திரும்ப கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்கு என் தந்தை மணவயலில் உள்ள 28 செண்டை எனது கணவர் பெயருக்கு கிரையமாக பதிந்து கொடுத்தார். மேற்படி ரூ.11ஆயிரம் கடன்தொகையை நான் மட்டும் கொடுத்தேனா எனது அக்காவும் சேர்ந்து கொடுத்தாரா என்றால் நாங்கள் இருவரும் ஒரேநபரைத்தான் திருமணம் செய்துள்ளோம், ஒன்றாகத்தான் கொடுத்தோம்.

11. மேற்படி கடன்தொகைக்கு ஈடாகத்தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். பத்திரத்தில் 1, 2 பிரதிவாதிகள் கையொப்பம் செய்தாரா என்றால் செய்யவில்லை. மேற்படி பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த வெண்ணிலபத்திரம் என்வசம் உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது.

12. எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் எத்தனை வருடமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் 10−20 ஆண்டுகள் ஆகும். எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் சீர்வரிசை செய்தார்களா என்றால் செய்யவில்லை. 1, 2 பிரதிவாதிகளை அணுகி எனது பங்கை எப்போது கேட்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 2 −3 மாதங்களுக்கு முன்பாக கேட்டேன்.

13. நானும், எனது அக்காவும் எனது தந்தையிடம் குடும்பச் சொத்துக்களில் பங்கு எதுவும் தேவையில்லை சர்வே எண் 15/17ல் 30 சென்டு விஸ்தீரணம் உள்ள நிலத்தை மட்டும் எழுதிக்கொடுக்கும்படி கேட்டதால் எனது தந்தையும், எனது சகோதரர்களான 1, 2 பிரதிவாதிகளும் ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை பொறுத்து வங்கியில் கடன் வாங்கவேண்டி இருப்பதால் கிரையபத்திரமாக வாதியின் கணவரான 3ம்பிரதிவாதி பெயருக்கு பத்திரம் எழுதித்தரும்படி கேட்டதை ஒப்புக்கொண்டு எனது தகப்பனார் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

14. தாவாச் சொத்துக்களை எந்தகாலத்திலும் நான் கூட்டாக அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. பல வருடங்களாக நானும், எனது கணவரும் திருப்பூரில்தான் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளும், எனது தகப்பனாரும் எனக்கும், எனது பிள்ளைகளுக்கும் உரிய சீர்வரிசைகளை செய்து வந்தனர் என்றால் சரியல்ல. சீர்வரிசை போக இதர சொத்துக்களில் எங்களுக்குரிய பங்கை விட்டுக்கொடுத்துவிட்ட காரணத்தினால் சர்வே எண் 15/17ல் 30 செண்டு நிலத்தை எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

15. சொத்தில் பங்கு வாங்கிவிட்டதால்தான் எனது கணவரும், எனது சகோதரியின் மகளும் என்னுடன் சேர்ந்து வழக்கு நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது காங்கேயநத்ததில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தேவையான பங்கை கொடுத்துவிட்டதால் 1, 2 பிரதிவாதிகள்மீது தேவையில்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை கூட்டாக அனுபவிக்கவில்லை அதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.